279

உ

ஸ்ரீ ராமஜெயம்.

தென்னிந்தியா
மறவர்குல விருத்தாந்த கவி.

சூரியகுலம், சந்திரகுலம், அக்னிகுலம், சேரசோழ பாண்டியர் மறவர்.

விநாயகர் துதி.

ஆனைமுகவன் அறுமுகவன்
அம்பிகைப்போன் னம்பலவன்
ஞானகுரு வாணியைமுன் னாடு.

இஃது
தென்னிந்தியர் மறவர் குல அபிவிர்த்திச்சங்க
மறவர் எலிமெண்டரிஸ்கூல் மானேஜர்
S. P. சுப்பையாத்தேவரவர்களால்
அம்பாசமுத்திரம்
ஸ்ரீராமகிருஷ்ணபிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

1923 [அணா 1]

உ

ஸ்ரீ ராமஜெயம்

தென்னிந்தியா
மறவர்குல விருத்தாந்த கவி.

சூரியகுலம், சந்திரகுலம், அக்னிகுலம்,
சேர சோழ பாண்டியர் மறவர்.

விநாயகர் துதி.

ஆனைமுகவன் அறுமுகவன்
அம்பிகைப்போன் னம்பலவன்
ஞானகுரு வாணியைமுன் நாடு.

இஃது
தென்னிந்தியா மறவர் குல அபிவிர்த்திச்சங்க
மறவர் எலிமெண்டரிஸ்கூல் மானேஜர்
S. P. சுப்பையாத்தேவரவர்களால்
அம்பாசமுத்திரம்
ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

1923

நம் குலத்தவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம்.

நம் மறவர் குல ஆதிசந்திரகுல, சூரியகுல அக்னி கோத்திரமென்றும், க்ஷத்திரிய குலமென்றும், சேர சோழ பாண்டியர்கள் நம்குல முன்னோர்களென்றும், உலகாதிபதிகளாய் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு இவைகளை ஆண்டுவந்தார்களென்றும், தெய்வபக்தியும், குல ஒற்றுமையும் மனுநீதி, தர்ம சாஸ்திரப்படியும் தருமத்தைச்செய்தும் அரசர்கள் குடிகளை ஆதரித்தும், குடிகள் ராஜவிசுவாசமாயும் நடந்துவந்தார்களென்றும் அநேக புராணகாவியங்களின் மூலமாய் விளங்குகிறது.

இது விஷயங்கள் கண்டறிவதற்குரிய வாசித்த பெரியோர்கள் பார்க்கவேண்டிய சாஸ்திரங்களாவன:—

வாழ் எழுபது என்னும் மூவரசர்குல விளக்கம்.
வடகரையாதிக்கம், திருக்குறள், திருவிளையாடல், வால்மீகி ராமாயணம், கம்பர் ராமாயணம், புறநானூறு, இன்னும் சில சாஸ்திரங்களைப்பார்த்து நுட்பமறியவும்.

“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே.”

“கல்லாதொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே.”

நல்லார் நயவரிருப்ப நயமனை
கல்லார்க்கொன்றாகிய காரணம்—தொல்லை
வினைப்பயனை யல்லதுவேநெடுங் கண்ணாய்
நினைப்ப வருவ தொன்றில.

பொருள்;— நற்குணமுடைய நல்லார் நற்குணமில்லாத கல்லார்க்கும், அறிவிலார்க்கும் எப்பொழுதும் குலத் தொல்லை. ஆலோசிக்குமிடத்து குலம் விர்த்தியடைய கல்வியே கண்ணொழிபெருங் கீர்த்தியாம்.

“எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்.”

உ

ஸ்ரீ ராமஜெயம்.

விஷய சூசிகை.

ஸ்ரீமான் நம் குல அரசர்களும், ஜமீன்தார்களும், பாண்டியர்களும், தலைவர்களும், பண்ணையார்களும் இன்னும் சில கற்றோர்களும், தூத்துக்குடி ஏ. பி. ஆர் தர் தேவர் அவர்களும், குலசேகரன்புதூர் மறவர்சங்க காரியதரிசி சண்முகவேலுத்தேவர் அவர்களும், மருதூர் கந்தசுவாமித்தேவர் அவர்களும், திருக்குரங்குடி லெக்ஷ்மணபாண்டியன் அவர்களும், நெடுவேலி சீனிஅய்யாத்தேவர் அவர்களும், விக்கிரமசிங்கபுரம் பண்ணை கருத்தய்யாத்தேவர் அவர்களும், தருவை சிவனுத்தேவர் அவர்களும் மருகால்குறிச்சி பிச்சாண்டித்தேவர் அவர்களும் இன்னும் நம்மறவர்குலாபிமானிகளும், தென்னிந்தியா மறவர்குல அபிவிர்த்தி சங்கத்தை நடத்தி நம்குலத்தை கல்விக்கும் ஒற்றுமைக்கும் கூட்டம்கூட்டி விர்த்திசெய்துவருகிறபடியால் நம்மறவர்குலத்தவர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும்போய் மேற்சொல்லியவர்கள் தகவலோடு கூட்டம் கூட்டிவைக்க முயற்சிசெய்யவேண்டுமென்று எளியேனாகிய நான் சகலபிரபுக்களையும் தாழ்மையாய்க்கேட்டுக் கொள்கிறேன்.

மேலேகண்டவைகளை சிலபெரியோர்களிடம் கேள்விப்பட்டும், சில நூல்களை ஆராய்ச்சிசெய்தும் என் சிற்றறிவுக்கு எட்டியமட்டும் அச்சிட்டு வெளியிடலாயினேன். இதில் சொல்குற்றம், பொருட்குற்றமிருப்பினும்

அவைகளை விலக்கி குணத்தைமட்டும் எடுத்துக் கொண்டு நம் குலம் முன்னேற்றமடையும் வழியைத் திறந்து என்னை ஆசிர்வதிக்கும்படி தாழ்மையாய் கேட்டுக்கொள்ளும்,

தென்னிந்தியா மறவர் குல அபிவிர்த்திசங்க மறவர் எலிமெண்டரி ஸ்கூல் மானேஜர்

S. P. சுப்பையாத்தேவர்.

ஸ்ரீமான் கருணலய வலங்கப்புலி பாண்டியனவர்கள் தென்னிந்தியா மறவர் அபிவிர்த்தி சங்கத்திற்கு ரூ 50 பொருளுதவி செய்திருக்கிறார்கள்.

கவி.

படிப்பிழந்த நமது குலம் படிக்கவேண்டி
பகவானைப் பலநாளும் பணிந்து போற்றி
பண்புடனே நம்குலத்து அரசர்களை
பண்டுள்ள நமது முன்னோர் பணிந்ததுபோல்
இன்பமுடன் யாவருமே பணியவென்று
இதமான சாஸ்திரங்கள் கூறுவோமே. 1

ஒற்றுமையாய் வாழ்ந்திருந்த நமது முன்னோர்
ஓர்குறையு மில்லாமல் வாழ்ந்ததாக இப்போது
சாஸ்திரத்தில் வெளிவந்ததால் எடுத்துரைத்தேன்
பிழையிருந்தால் சிறியேனை மன்னிப்பீரே. 2

ஆதியில் ஆதியாகி அருமறைப் பொருளுமாகி
ஜோதியாய் பரமுமாகி சுடரொளியான ஆதி
ஆதியும் ஜோதியாகி அருள்பரஞ் சத்தியாகி
மேகமாய் நின்ற ஜோதி விளங்கவே காத்தஆதி
மறைபொருளாகக்காத்த மன்னரேமறவர்தாமே 3

அண்டம் காத்தவா அருமறையோர் இடுக்கண் தீர்த்தவா
சண்டப்பிரசண்ட லோகம் காத்தவா—ஈசன்
ஜடாமுடியை வில்லாலடித்து வரத்தைப் பெற்றவா
அஸ்தினாபுரியை ஆண்டவா—இன்னும் புகழ்
சர்க்கரைக் கோட்டையிலிருந்தரசு புரிந்தவா— ராம

சத்தியின் வயிற்றிலப்போந் தரித்திடும் பாலனுந்தான்
உத்தமமாய் கெர்ப்பத்திலே உதைத்ததால் வெடித்து
அப்போம் — சுத்தமாய் விலாஎலும்பை சடக்கென
முரித்துக் கீழே பத்தியாய் பிறந்தபோதே பலகலை
கற்றுணட்போம் 2

சத்தியும் பிரம்மைகொண்டு தனுவிலே குழந்தைதன்னை
உத்தமாய்வளர்க்கும்போது உமையவள் தடையந்தன்னை
பத்தியாய் மறைத்துவைத்து பார்வதி குழந்தைதானும்
உத்தமாய் மறவாரென் றுரைத்திட்டார் ஈசன்தானே 3

நகையது காணுமென்று நானிலத்தேவர்க்கெல்லாம்
சுத்தமாய் ஈசனாரும் சொல்லியே வரவழைத்து
இந்நகை கொடுத்தபேர்க்கு இந்திரப்பட்டங்கட்டி
இருந்தரசாள்வாரென்று ஏகினார் ஈசனாரும் 4

தேவரால் முடியாதென்று சென்னியிற் றொழுதுபோற்றி
எங்களால் முடியாதென்று இறைவனே! காக்கவேண்டும்
என்றுமே தேவரெல்லா மீசனைத் தொழுது தாழ்ந்து
அடைக்கலங்காக்கவென்றடியிணைத் தாழ்ந்தாரப்போ 5

சத்தியின் மைந்தன் றானும் தான்பொருள் கொடுக்கே
னென்று விந்தையாய் மறைத்துவைத்த விமலனி தடை
யந்தன்னை, விமலனார் முன்னே வைத்து பத்தியாய்த்
தொழுது நின்ற பாலனு மறவர்தேவன் தானே 6

பத்தியாய் தடயந்தன்னை பாலனும் கொடுத்தபோதே
அத்தனும் சந்தோஷித்து அருமறைக் கூட்டம் தன்னில்
இந்திரப் பட்டங்கட்ட யேகவே ஈசனரும்
மந்திர தேவரெல்லாம் மகுடமும் தரித்தாரப்போம் 7

பத்தியாய் இந்திரன் தானும் பதரியே ஈசன்பாதம்
சுத்தமாய் தொழுது நின்ற தேவனை ஈசன்பார்த்து
பத்தியாய் இரண்டுபேரும் பாரிலும் தெய்வலோகம்
சுத்தமாய் பகுந்தரசு ஆளும் என்றுரைத்தாரன்றே 8

பத்தியாய் பூலோகத்தில் பரிவுடன் ராஜாவாகி
உற்றதோர் மண்டலமும் உமையவள் மைந்தன்தானும்
பத்தியாய் ஆண்டாரப்போம் பாரினில் உலகமெல்லாம்
அத்தனைப்பூஜை செய்து துஷ்டநிக்கிரகஞ்செய்து
பத்தியாய் ஆண்டாரப்போம் பரம்பரை இன்னும்தானே 9

வாழ்ந்திட்ட லோகம் கிரேதா. திரேதா. துவாரகா,
கலியுகா வரையில் ஆண்டமன்னரெலாம் அக்னிகுலம்
சூரியகுலம் சந்திரகுலம் தான் ஆண்டதோர் ராஜரெல்லாம்
பின்னிய மறவர் தேவர் பின்குலம் ஒன்றுமில்லை 10

சீதையைக் காணோமென்று ஸ்ரீ ராமனும் திரியும்போது
காதலாய் முடியைத்தானும் கார்த்தலும் அணையை
முடித்தலும் ராகூதன் கிளையை யப்போம் நாடியே கொன்று
பின்னே கூடியே ராமன் என்றும் குடிகுலம் ராயர் என்றும்
சேதுஎன்றும் பார்வதி காக்கவென்றும் பரமனும் ராமனுந்
தான்முடிதனை தூக்கிவைத்து பூலோக முழுதுமே ஆளு
(மென்றார்

பல்லவி

ராமமுடி தரித்த ராஜீயம் ஆண்டவா
தேசதேசம் புகழ்படைத்த சேதுகுல பூபதி (ராம)

அனுபல்லவி.

சத்திமுடி தரித்தவா சூரியகுல தேசிகா
விந்தையாக பூமிதனில் வந்துதித்த பாலகா
வைகுண்டம் காத்தவா--வளம்புகழைப்பெற்றவா
சுந்தரமாய் ராமநாதபுரம் ஜோதியாக உதித்தவா
(ராம)

ஈசன்முடி காத்தவா பார்முழுதும் ஆண்டவா
அரக்கர்குலம் வென்றவா அரிராமனாகப் பிறந்தவா
துஷ்டர்களைக் கொன்றவா ஜோதி சேதுக்குகந்தவா
விந்தையாய் ராமநாதபுரத்தில் வந்துதித்த தேசிகா (ராம

இந்திரனாய்ப் பிறந்தவா ஈசன்முடி காத்தவா
சுந்தரமாய் தபசுகளை ஜோதியாக காத்தாவா
ண்ணுலகில் பிறந்தவா மானிடரைக் காத்தவா
னும்புகழ் ராமநாதபுரம் இருந்தரசு புரிந்தவா (ராம)

சேது அணை முடித்தவா தேவர்க்கபயம் கொடுத்தவா
இராவணனைக் கொன்றவா இராஜமுடி பெற்றவா
பாரதத்தை வென்றவா பார்வதியைக் காத்தவா
ண்ணுபுகழ் ஊர்க்காட்டில்மறைபொருளாய்ஆண்டவா
(ராம)

குடிகுலத்தைக்காத்தவா கோதுதீர்த்தபூபதி
பழுதில்லாமல் சிங்கம்பட்டியில் பண்பாயரசுபுரிந்தவா
(ராம)

தீர்த்தபதியும் தென்பொதிகை முனியருளால், வந்து முடிபுனைந்து வாழ்நாட்டை அரசாண்ட, எங்கள் குல முதலே ஏழைகளைக் காக்கவேண்டும்.

மதுரைப்பதிபாண்ட மன்னவர்கள் பாண்டியர்கள் அன்னாள் நடத்திய ஆதிசங்க முறையதனை இன்னாள் நடத்திவைத்து ஏழைகளைக் காக்கவேண்டும்.

அரசு மனமகிழ்ந்து ஆதரித்து நம்மள் குலம் கல்வி பயிர்ச்சிக்க காத்தருள வேண்டுகிறோம்.

வடகரையாதிக்கம்.

சிவகுருநாதக் கவிராயர் பாடிய

வருக்கக்கோவை.

மகத்துவனுஞ் சிவனணைந்தான் பெரியசுவாமி தன்மே
அகத்திணையாம்வருக்கக்கோவைஆங்கறைந்தனன்சொ
மிகத்துதியாக விசைய வருடந் தைமேவு நன்னாட்
செகத்தில்வங்காரை சிவகுருநாதசெயதுங்கனே

அம்புயமா னெழில்வாய்க் திங்ஙனே நின்றவாயிழையை
நம்புநலாக விரந்தெய்தலாமினி நன்னெஞ்சமே
செம்புலி ராசன் பெரியசுவாமி சிலம்பின் வள்ளி,
கொம்புடனே குகன்சேர்ந்தது போலிக்குவலையத்தே.